



# நகர் ஊரமைப்பு துறை(DTCP)

## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்

### செம்பியநல்லூர் ஊராட்சி

திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், அவினாசி ஊராட்சி ஒன்றியம், செம்பியநல்லூர் ஊராட்சி மற்றும் கிராமம் க.ச.எண்கள் : 257/4, 258/4 ஆகியவற்றில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான திருத்திய தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1:500 (1 செ.மீ = 5.0 மீ) (திட்டமில்லா பகுதி)

இணையதள விண்ணப்பம் எண்.714BCWD3, நாள்.10.08.2022

குறிப்பு:

வ

மனைப்பிரிவின் பரப்பு : 3.78 ஏக்கர் (அ) 15300.00ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 67 (EWS மனைகள் உட்பட)

மனைப்பிரிவின் பரப்பு 1 ஹெக்டேருக்கு அதிகமாக இருப்பின்.

(i) நலிவடைந்த பிரிவினருக்காக ஒதுக்கப்பட வேண்டிய EWS மனைகளின் பரப்பு — (மனைப்பிரிவின் பரப்பு–மனைப்பிரிவு சலைகளின் பரப்பு)X(10/100)
(15300.00–4412.64)X(10/100) = 1088.73ச.மீ

(ii)நலிவடைந்த பிரிவினருக்காக ஒதுக்கப்பட்ட EWS மனைகளின் பரப்பு (EWS மனை எண்கள்:35–50, 57–62) :(22 மனைகள்) — 1165.57 ச.மீ (10.70%)

மனைப்பிரிவின் எல்லை

நிலையிலுள்ள சாலை/அணுகு சாலை

பொதுஒதுக்கீடுகள் (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை) :

I. மனைப்பிரிவு சாலை பரப்பு : 4412.64 ச.மீ

II. பூங்கா :

i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (15300.00–4412.64)X(10/100) = 1088.73ச.மீ

ii) ஒப்படைக்கப்பட்ட பூங்கா பரப்பு : 1114.66 ச.மீ (10.23%)

III. பொது உபயோகம்

A) LOCAL BODY- க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (15300.00–4412.64)X(0.5/100)=54.43 ச.மீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 65.32 ச.மீ (0.59%)

B) TANGEDCO-க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (15300.00–4412.64)X(0.5/100)=54.43 ச.மீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 70.48 ச.மீ (0.64%)

கட்டிட வரம்பு : 9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ –ம் விடப்படல் வேண்டும்.
9.0மீ முதல் 18.0மீ அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ –ம் விடப்படல் வேண்டும்.

மூலை முடக்கு : 12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீX 1.5மீ –ம் விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண்:18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA-1 ) நாள்: 04.02.2019 மற்றும் அரசாணை எண்:16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: 31.01.2020– ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
2. அரசாணை எண் 181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020–ன் படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான தார் சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலைத்தொட்டி, தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகளை மனுதாரரால் அமைக்கப்பட்டு அதனை உள்ளாட்சியால் உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்க்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்டவருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் தலைவர், செம்பியநல்லூர் ஊராட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்,சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் 0.6மீ X 1.2மீ அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து யூனியன் பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.
8. நலிவடைந்த பிரிவினருக்காக EWS மனைகள் 35-50, 57-62 ஆகியவற்றை மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற மூன்று வருடங்களுக்கு மனை ஒருங்கினைப்பு செய்யக் கூடாது.

SWP/DTCP/TIRUPPUR/LAYOUT NO : **51/2023**

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Tiruppur
Date:2023.02.10 15:13:52

கு.அருண்குமார்
அளவர் / உதவி வரைவாளர்

க.பத்மா
மேற்பார்வையாளர்

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் மாவட்டம்.